## மே 1 - சர்வதேச தொழிலாளர் தினம்

## மே 1 - மகாராஷ்டிர & குஜராத் மாநில தினம்

## மே 1 - உலக ஆஸ்துமா தினம்

- ஆண்டுதோறும் **மே மாதம் முதல் செவ்வாய்க்கிழமை** உலக ஆஸ்துமா தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- **உப்பு சத்தியாகிரக போராட்டத்தின் 88-வது ஆண்டு நினைவு நாள்** நிகழ்ச்சி நாகை மாவட்டம் **வேதாரண்யத்தில்** நேற்று நடைபெற்றது.
- **1930 ஏப்ரல் 30-ம்** தேதி ஆங்கிலேயருக்கு எதிரான உப்பு சத்தியாகிரகப் போராட்டம் **ராஜாஜி** தலைமையில் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நடைபெற்றது.
- மகாராஷ்டிர மாநிலத்தில் இந்த ஆண்டு **சிந்துதுர்க் மாவட்டம் பாருலேசிபி** என்னும் இடத்தில் **புதிய விமான நிலையம்** தொடங்கப்பட உள்ளது.
- ஜம்மு-காஷ்மீர் மாநிலத் **துணை முதல்வராகிறார் சபாநாயகர் கவீந்தர் குப்தா.**
- **2018 ஏப்ரல்** மாதத்தின் **ஜி.எஸ்.டி. வருவாய் ரூ. 1 லட்சம் கோடி**யைத் தாண்டியது.
- அடிப்படை மற்றும் செயல்முறை அறிவியல் , மனிதநேயம், கலை, சமூக அறிவியல், தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான துறைகளில் ஆராய்ச்சிக்கான **வருகையாளர் விருதுகளை குடியரசுத்தலைவர்** திரு.ராம் நாத் கோவிந்த் 02.05.2018 வழங்குகிறார்.
- **செர்பிய குடியரசு நாட்டின் துணை பிரதமரும்** வெளியுறவுத் துறை மந்திரியுமான **இவிகா டேசிக்** இந்தியாவில் 4 நாட்கள் சுற்று பயணம் மேற்கொள்கிறார்.
- ***இந்தியாவின் இளம் புத்தக ஆசிரியர்*** - அயான் கபாடியா என்ற 9 வயது *மும்பை சிறுவன் சாதனை*

- **புதுதில்லியில்** 01.05.2018 நடைபெற்ற **இந்தியா ஜப்பான் இடையிலான 9 -வது எரிசக்திப் பேச்சுவார்த்தை** த் தொடர்பான கூட்டத்திற்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், பாதுகாப்பான, எளிதில் அணுகக் கூடிய எரிசக்தி வளம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் **ஜப்பான், சீனா, தென்கொரியா உச்சி மாநாடு** மே 9-ம் தேதி **டோக்கியோ** நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் இந்த மாநாடு தற்போது நான்காவது முறையாக நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.
- **இஸ்லாமாபாத்தில் அதிநவீன சர்வதேச விமான நிலையம்** ஒய் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.இந்த விமானநிலையம் பாகிஸ்தானின் சர்வதேச விமானங்களில் மிகப்பெரியதாக இருக்கும்.
- அமெரிக்காவுக்கான இந்தியாவின் **இன்ஜினீயரிங் ஏற்றுமதி** 2017-18-ம் நிதி ஆண்டில் 17 **சதவீதம் அதிகரித்து** 7,600 கோடி டாலராக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் ஏற்றுமதி வருமானத்தில் **இன்ஜினீயரிங் ஏற்றுமதி**யின் பங்களிப்பு 25 **சதவீத** அளவுக்கு உள்ளது குறிப்பிடத்தக்கது.
- இந்திய **ஆடவர்** ஹாக்கி அணியின் **பயிற்சியாளரானார் ஹரேந்திர சிங்**; **மகளிர்** அணியின் **பயிற்சியாளராக மரிஜென்** மறுநியமனம்.
- கால்பந்து எழுத்தாளர்கள் சங்கத்தின் **சிறந்த வீரர் விருதை** தட்டிச் சென்றார் **எகிப்து** நாட்டின் முன்னணி கால்பந்து வீரர் **முகமது சாலா.**
- **ஐசிசி *கிரிக்கெட்* டெஸ்ட் தரவரிசை- இந்தியா** 125 புள்ளிகளுடன் தொடர்ந்து **முதல் இடம்.**
- உலகத் தரவரிசையில் **முதல் இடம்** பிடித்தார் **துப்பாக்கி சுடுதல் வீரர் ஷாஜர் ரிஸ்வி**
- **சிதான்ஷு ரஞ்சன் கர்** - பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தலைமை இயக்குனர்